நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## MC. No.9/2024

## P.W. 3 –ன் வாக்குமூலம்

**(மனுதாரர்தரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வம் |
| தந்தை / கணவர் பெயர் | : | கருப்பண்ணன் |
| கிராமம் | : | பெரியசோரகை |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW3 |
| வயது | : | 47 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம்)–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மே மாதம், 22–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிர்மனுதாரர் ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.44 PM

1. நான் தற்போது பெரியசோரகை கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கில் மனுதாரர் தனலட்சுமி என் பக்கத்து நிலத்துக்காரர் ஆவார். அவர் அவரது கணவருக்கு எதிராக ஜீவனாம்சம் கோரி மனுதாக்கல் செய்துள்ளார். அது சம்மந்தமாக எனக்கு தெரிந்த சங்கதிகளை தெரிவிக்கும்

பொருட்டு எழுத்து பூர்வமான உறுதி மொழி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். எனவே மனுப்படி உத்தரவாகுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.48 PM

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்காக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**